


மியாட் மருத்துவமனையில் வயிற்று புற்றுநோய் சிகிச்சைக்கு பிரிட்டிஷ் மருத்துவர்கள் கூட்டுடன் கண்டுபிடிக்கப்பட்ட புது சிகிச்சையை இதன் நிர்வாக இயக்குனர் பிரித்வி மோகன்தாஸ் அறிமுகம் செய்தார். நிறுவனர் டாக்டர் மோகன்தாஸ், சேர்மன் மல்லிகா மோகன்தாஸ், ஐரோப்பிய, மியாட் மருத்துவர்கள் உடன் உள்ளனர்.

# ஐரோப்பிய மருத்துவர்கள் கூட்டுடன் மியாட் மருத்துவமனையில் வயிறு புற்றுநோய்க்கு நவீன சிகிச்சை

## டாக்டர் பிரித்வி மோகன்தாஸ் தகவல்

சென்னை, நவ.21–

புதியதாக ‘எச்ஐபிஇசி’ என்னும் நவீன ‘ஹாட் ஹீமோதெரபி’ சிகிச்சையை ஐரோப்பிய மருத்துவர்கள் கூட்டுடன்வயிறு புற்றுநோய்க்கு மியாட் மருத்துவமனையில் செயல்படுத்தி சாதனை படைத்துள்ளது.

இந்த சிகிச்சை மூலம் வயிறு புற்றுநோய் இறப்பை 25 சதவீத அளவுக்கு குறைக்க முடியும் என்று மியாட் மருத்துவமனையின் துணை நிர்வாக இயக்குனர் டாக்டர் பிரித்வி மோகன்தாஸ் தெரிவித்தார்.

‘இந்தோ பிரிட்டிஷ் மருத்துவ முயற்சி’ என்னும் 2 நாள் மாநாட்டை மியாட் இன்டர்நேஷனல் மருத்துவமனை நடத்தியது. நிர்வாக இயக்குனர் மற்றும் ‘இந்தோ பிரிட்டிஷ் ஹெல்த்பீனிசியேடிவ்’ அமைப்பின் செயலாளர் டாக்டர் பிரித்வி மோகன்தாஸ், இந்த சர்வதேச வயிறு புற்றுநோய் அதிநவீன சிகிச்சை மாநாட்டிற்கு ஏற்பாடு செய்திருந்தார். சேர்மன் மல்லிகா மோகன்தாஸ் கலந்து கொண்டார்.

கிரிஸ்டி பவுண்டேஷன் டிரஸ்ட் சாரா ஓடிவ்யா சிறப்புரையாற்றினார். நிறுவனர் டாக்டர் மோகன்தாஸ், தலைவர் மல்லிகா மோகன் விழாவில் பங்கேற்றனர்.

டாக்டர் பிரித்வி மோகன்தாஸ் பேசுகையில், இந்தியாவில், இந்தப் புதிய சிகிச்சை முறையின் வழியாக நூற்றுக்கணக்கான புற்றுநோயாளிகளின் இறப்பை 25 சதவீதம் வரை குறைக்கலாம்.

எச்.ஐ.பி.இ.சி என்று அழைக்கும் இ ச் செ ய ல் மு றை யின் ப டி , சிறப்பு மருந்துகள், குறிப்பிட்ட வெப்பநிலையில் அடி வயிற்றுப் பகுதியில் பாதிக்கப்பட்ட அடிவயிற்று உட்சுவர் பகுதியை (பெரிடோனியம்) அகற்றிய பின் செலுத்தப்படும் என்றார்.

ஐரோப்பிய நிபுணர்கள் மற்றும் இந்தியாவில் சென்னை மியாட் மருத்துவமனை நிபுணர்கள் இணைந்து இச்செயல்முறையை கண்டுபிடித்து வடிவம் தந்துள்ளனர்.

முதல் நாளில் செயல்முறை விளக்கம், எத்தகைய நோயாளிகளுக்கு பலன் கிடைக்கும் என்னும் விவரம் தரப்பட்டது.

2ம் நாளில் நேரடி அறுவை சிகிச்சை செயல் விளக்கமும் மற்றும் அதைத் தொடர்ந்து புற்றுநோய் மருந்துகள் வழங்குதலில் முக்கியப் பங்கு கொண்ட செலவிலியர்களுக்கான சிறப்பு அமர்வுகளும் நடத்தப்படும் என்றார் அவர்.

மியாட் மருத்துவர்கள் கேன்சர் தலைமை ஆன்காலஜி அறுவை சிகிச்சை நிபுணர் ஸ்ரீகுமார் பிள்ளை, ரேடியேஷன் பிரிவு தலைவர் எஸ். லட்சுமி நாராயணன், புற்றுநோய் மருந்து பிரிவு தலைவர் ராம்பிரபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

முற்றிய நிலை அல்லது சிக்கலான அடிவயிற்று புற்றுநோயானது, பெரும்பாலும் பெரிடோனியல் லைனிங்கிற்கு பரவுவதால் நரம்புகள் வழியாக வழங்கப்படும் ஹீமோதெரபியின் சிகிச்சை பலன்களை போதுமான அளவு பெறாது. இதன் காரணமாக, அறுவை சிகிச்சைக்குப் பிறகு முடிவுகள் மாறுபடலாம். இச்செயல்முறையில் அறுவை சிகிச்சைக்குப் பிறகு உடனடியாக சரியான அளவுகளில் வெப்பமேற்றப்பட்ட ஹீமோதெரபி மருந்துகள் நேரடியாக அட்டாமினல் கேவிடியில் செலுத்தப்படும். இம்மருந்துகள் வயிற்றிலிருந்து வெளியேற்றுவதற்கு முன்பாக சற்றே செயல்திறனோடு நுண்ணுயிரியல் புற்றுநோய் அணுக்களையும் இது அழித்து விடுவது. அறுவை சிகிச்சையின் பலன்களை பல மடங்குகள் அதிகரிக்கும். இச்சிகிச்சை முறை உலகளாவிய அளவில் வெறும் 30 மையங்களில் மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய புற்றுநோய் சிகிச்சை நிபுணர்கள் செல்லையா செல்வசேகர், கேதே ஹெவன், ரோகித் கோச்சார், ரெபகா, பால் புல்போர்டு, சாரா, சாய்பி ஆகியோர் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இந்த சிகிச்சை பற்றிய அறியwww.ibtii.in வலைதளத்தைப் பார்க்கலாம்.